தேதி.09.04.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.5/2015 திரு.ஜடேருத்ரசாமி, த/பெ.பசுவராஜப்பா வா.சா.3

<u>வா.சா.3 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கேர்மாளம் செக்போஸ்ட் அருகே டீக்கடை நடத்தி வருகிறேன். எப்போதிலிருந்து நடத்தி வருகிறேன் என்றால் எனது தந்தை காலத்திலிருந்து சுமார் 60 ஆண்டுகளாக நடத்தி வருகிறோம். எனக்கு விவசாய பூமி எதுவும் இல்லை என்றால் எனது தந்தைக்கு உள்ளது எனக்கு எந்த பூமியும் இல்லை. நான் விவசாயம் எதுவும் செய்யவில்லை. சாரதாம்மாளை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் சத்தியமங்கலத்திற்கு செல்லவேண்டும்என்றால் கேர்மாளத்தில் உள்ள டீக்கடையில் பேசிவிட்டு செல்வார் அதனால் பழக்கம். வேறு எந்த வகையிலும் எனக்கு பழக்கம் இல்லை. எனவே சாரதாம்மாளின் குடும்ப சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். ராமசாமியை எனக்கு எத்தனை வருடங்களாக தெரியும் என்றால் சுமார் 30 வருடங்களாகத் தெரியும். எவ்வாறு பழக்கம் என்றால் எனது டீக்கடைக்கு வருவார் அவ்வாறு பழக்கம் ஏற்பட்டது. இந்த தாவா சொத்து எங்கு உள்ளது என்று தெரியுமா என்றால் கேர்மாளத்தில் உள்ளது. அதை நான் நேரில் பார்த்துள்ளேனா என்றால் கோவில் விஷேசத்திற்கு செல்லும்போது பார்த்துள்ளேன். மேற்படி தாவா சொத்தின் விஸ்தீர்ணம் எவ்வளவு என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மொத்தம் சுமாராக ஐம்பது ஏக்கர் உள்ளது என்று தெரியும். ராமசாமியும், சாரதாம்மாளும் கிரைய ஒப்பந்தம் எழுதியதாக நான் சொல்லியுள்ள

நிலையில் எந்த தேதி, மாதம், வருடத்தில் கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்டது என்றால் தேதி, மாதம் தெரியாது. சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது. மேற்படி பிரமாண பத்திரிக்கையில் 20 வருடங்களுக்கு முன்னர் கிரைய ஒப்பந்தம் போட்டுள்ளதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் குறிப்பாக எந்த தேதியில் கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்று சொல்லவில்லையா என்றால் சொல்லவில்லை. மேற்படி கிரைய ஒப்பந்தம் தயார் செய்த போது நான் உடன் இருந்தேனா என்றால் சாரதாம்மாள் என்னை அவருடன் அழைத்து சென்றார். கிரைய ஒப்பந்தம் செய்யும்போது என்ன பேசினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் என்ன பேசினார்கள் என்று நான் கவனிக்கவில்லை. அங்கு என்ன நடந்தது என்று எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் குறித்து என்ன ஒப்பந்தம் பேசப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் சாட்சி கையெழுத்து எதேனும் பெறப்பட்டதா என்றால் என்னிடம் எதுவும் பெறப்படவில்லை. மேட்டுப்பாளையத்தில் இருந்து மூன்று நபர்கள் வந்தார்கள் அவர்கள் பெயர் விவரம் தெரியாது. எனவே கிரைய ஒப்பந்தத்தில் யார் யார் எல்லாம் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். நான் என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் யார் எல்லாம் சாட்சி கையெழுத்து இட்டார்கள் என்று சொல்லி தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரக்கையானது நான் சொல்லி தயார் செய்யப்படவில்லை என்றும், ராமசாமி தான் முழு விவரங்களையும் சொல்லி தயார் செய்து என்னிடம் கையொப்பம் பெற்று அவருக்கு ஆதரவாக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளதுபோல் ராமசாமிக்கும், சாரதாம்மாளுக்கும் இடையே எந்த கிரைய ஒப்பந்தமும் ஏற்படவில்லை என்றும், நான் ராமசாமிக்கு வேண்டிய நபர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாரதாம்மாளுக்கு என்னை யார் என்று தெரியாது என்றும், வழக்கிற்காக என்னை சாரதாம்மாள் அழைத்து சென்றதாக பொய்யாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.